**இலயோலா கல்லூரி முன்னாள் மாணவர்கள் உருவாக்கிய**

# இந்திய அரசியல் ஜனநாயக யுக்திகள் (IPDS)

## INDIAN POLITICAL DEMOCRATIC STRATEGIES

## ஆய்வின் நோக்கம்

இலயோலா கல்லூரி முன்னாள் மாணவர்கள் (உருவாக்கிய) IPDS இணைந்து நடத்தும் மக்களை ஆய்வது மக்களுக்காகவே என்ற நோக்கத்துடன் தமிழக மக்களை மையப்படுத்தி பரப்புரைகளையும், பயிலரங்குகளையும் இந்திய அரசியல் ஜனநாயக யுக்திகள் ஆய்வு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

மக்களின் உள்ளத்தில் உள்ள எண்ணங்களை ஆய்வுப் பூர்வமாக அறிந்து செயல்பூர்வமாக திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியில் 2004-ல் தொடங்கி இதுவரை தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பயணம் செய்து இந்திய அரசியல் ஜனநாயக யுக்திகள், சமூகம், அரசியல் தொடர்பான 32 ஆய்வுகளை இதுவரை துல்லியமாக நடத்தியுள்ளது.

### கள ஆய்வு முடிவுகள்:

ஈரோடு (கிழக்கு) சட்டமன்ற இடைத்தேர்தல் நடைபெறும் தருவாயில் தற்போதைய அரசியல் நிலவரத்தை தீர்மானிக்கும் காரணிகளையும், அவற்றின் கூட்டுச் செயல்பாட்டையும் கணிக்க, பிப்ரவரி 7 முதல் 12 வரை ஈரோடு (கிழக்கு) சட்டமன்ற தொகுதியில் தேர்தல் கள ஆய்வு மேற்கொள்ளபட்டது. முன்னாள் இலயோலா கல்லூரி மாணவர்கள் இந்திய அரசியல் ஜனநாயக யுக்திகள் நிறுவனர் சி.திருநாவுக்கரசு அவர்களின் நேரடி வழிகாட்டுதலில் 1761 பேர் பங்கேற்ற இந்த ஆய்வில் **C.**பால்எபினேசர் (Managing Director) **K.**பிரபாகரன் (Chief Executive Officer) மற்றும் ஆய்வாளர்கள், உதவியாளர்களும், 50க்கும் மேற்பட்ட முன்னாள் மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் ஈடுபட்டனர். அனைத்து பகுதிகளிலும் ஆய்வு நடத்தப்பட்டது.

## பங்கேற்றோர் நோக்கம் :

களஆய்வு நடத்தப்பட்ட இடங்களில் ஆண்களே மிக அதிகம். கட்சி சார்பை பொருத்த வரையில் 50% எக்கட்சியையும் சாராதவர்கள் கட்சி உறுப்பினர்களில் அதிமுக (இரு அணிகள்) 22 தி.மு.க.18, பிற மற்ற கட்சிகள் 10.

தமிழர் பண்பாடு, சமூகம் - அரசியல் சூழலுக்கேற்ப எண்ணியல் (Quantitative) மற்றும் பண்பியல் (Quantitative) கூறுகளை உள்ளடக்கி, சி.திருநாவுக்கரசு உருவாக்கியுள்ள தமிழர் சமூக -பண்பாடு -உளவியல் அணுகுமுறை (Social -Cultural Approach இந்த ஆய்விலும் பின்பற்றப்பட்டது. சரளமான சகஜமான இயல்பான கருத்து எண்ணி உணர்வுப் பகிர்வுக்கு இணக்கமாக பெரும்பாலும் பதிலிறு (Open ended) கேள்விகள் கேட்கப்பட்டன.

- **தற்போதைய தமிழக அரசின் செயல்பாடுகள் :**

  தமிழகத்தின் முதல்வராக திரு.ஸ்டாலின் பொறுப்பேற்று (1½) பல மாதங்கள் ஆகவுள்ள நிலையில் அவர் தலைமையிலான அரசின் செயல்பாடுகள் குறித்து மிக முக்கிய தேவையான பிரச்சினையாக ஈரோடு (கிழக்கு) தொகுதி மக்களின் மதிப்பீடு.

| | | நன்று | சொல்லும்படி இல்லை | மோசம் |
|---|---|---|---|---|
| 1. | மதுகுடி பிரச்சினையை கையாளும் விதம் | 9.3 | 11.8 | 77.9 |
| 2 | ஒழுங்கான ரேஷன் விநியோகம் | 17.9 | 10 | 72 |
| 3 | மின்சாரக் கட்டணம் உயர்வு, சொத்துவரி உயர்வு | 30 | 9 | 61 |
| 4 | நலத்திட்டங்களின் செயலாக்கம் | 24.8 | 13.20 | 62 |
| 5 | சட்ட ஒழுங்கு பராமரிப்பது குறைபாடு | 15 | 10 | 75 |
| 6 | குடிநீர் பிரச்சினையைக் கையாளும் விதம் | 71 | 9 | 20 |
| 7 | கடும் விலைவாசி உயர்வு அரசு கட்டுப்படுத்தும் விதம் | 14.10 | 5.90 | 80 |
| 8 | அரசு துறையில் லஞ்சம் ஊழலை கட்டுப்படுத்துதல் | 13 | 6.90 | 80 |

❖ **ஈரோடு (கிழக்கு) தொகுதி சட்டமன்ற மக்களின் மிக முக்கிய பிரச்சினைகள்:**

பாதாளசாக்கடை, சாலைவசதிகள், நெசவாளர் சந்திக்கும் சவால்கள், 550 சாயசலவை பட்டறை, சாய ஆலைகள் மற்றும் தோல் ஆலை பொது சுத்திகரிப்பு நிலையம் மிக முக்கிய தேவை. அப்துல் கனி மார்க்கெட், ஜவுளி சந்தை, வியாபாரிகள் சந்திக்கும் பிரச்சினைகள், போக்குவரத்து நெரிசல், (ஈரோடு கிழக்கு தொகுதியில் செயல்படும் சாய மற்றும் தோல் ஆலைகள் சிறு-குறு தொழிற்சாலைகளிலிருந்து தினமும் ஒரு லட்சம் லிட்டர் அளவுக்கு வெளியேறும் கழிவு நீர் சுத்திகரிக்கப்படாமல் நேரடியாக காவேரியில் கலப்பது மக்களுக்கு சுகாதார சீர்கேட்டை அளித்து வருகிறது. அதனால் ஒருங்கிணைந்த சுத்திகரிப்பு நிலையம் தேவை என இருபது ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் கோரிக்கை விடுத்து வந்தாலும் யாரும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

போக்குவரத்து நெரிசலை தவிர்க்க புறநகர் பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் என்ற கால் நூற்றாண்டு கோரிக்கை பத்து ஆண்டுகளுக்கு மேலாக ஆகியும் முடிவுக்கு வராத மின் புதைபடம் அமைக்கும் திட்டம் போன்றவை தீராத பிரச்சினையாக நீடிக்கிறது.

❖ **ஈரோடு கிழக்கு தொகுதி மக்களின் எதிர்பார்ப்பு :**

பன்னீர்செல்வம் பூங்காவில் மேம்பாலம் சாயக்கழிவு நீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஐந்தாண்டு காலமாக பூட்டி கிடக்கும் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை திறந்து வைத்து பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெறுவது. நகரில் பல ஆண்டுகளாக மோசமான நிலையில் உள்ள சாலைகளை சீரமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

❖ **சாதி வாக்குகள் பலம் :**

ஈரோடு கிழக்கு தொகுதியில் 33% அளவுக்கு கொங்கு வெள்ளாள கவுண்டர் சமுதாய வாக்குகளும், 32% நாடார், தேவர், வன்னியர், பட்டியல் வகுப்பினர், சிறுபான்மையினர் சமுதாயம், பிற சாதிகள் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இதில் அடங்கும். இந்த தொகுதியில் புதிய வாக்காளர்கள் 20,000 பேர் உள்ளனர். 35% சதவீதம் அளவுக்கு முதலியார் சமுதாய வாக்குகள் உள்ளனர்.

### ❖ ஈரோடு கிழக்கு தொகுதியின் மொத்த வாக்காளர்கள் :

| | | |
|---|---|---|
| ஆண் வாக்காளர்கள் | - | 1, 10,025 |
| பெண் வாக்காளர்கள் | - | 1,16, 497 |
| மூன்றாம் பாலினம் வாக்காளர்கள் | - | 25 |
| மொத்தம் | - | 2,27,547 |

### ❖ ஈரோடு (கிழக்கு) தொகுதியை வெல்லப்போவது யார் ?

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மறைந்த நிலையில் மக்களிடம் மிகவும் அனுதாபத்தை உருவக்கியுள்ளது, அப்படியிருந்த போதிலும் காங்கிரஸ் வெற்றி பெற வாய்ப்பு. எந்த இடைத்தேர்தலிலும் இல்லாத அளவிற்க்கு இந்த தேர்தலில் பணப்புழக்கம் ஆளுங்கட்சி வாக்காளர்களுக்கு அதிக பணம் கொடுக்க இருப்பதாக தகவல் கூறுகிறார்கள். முக்கிய கட்சிகள் பரவலாக ஈடுபட்டுள்ளதாக கூறுகிறார்கள். ஒரு வாக்கிற்க்கு ரூ.5,000/- பணம் கொடுப்பதால் இந்த ஆய்வில் 3% சதவீதம் மாறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

### ❖ ஈரோடு (கிழக்கு) தொகுதி மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் கட்சி:

ஈரோடு (கிழக்கு) தொகுதி மக்களின் மேற்கண்ட பிரச்சினைகளை தீர்க்கும் திறமையானவையாக அ.தி.மு.க. அணிகள், தி.மு.க. அணிகள் சொல்லப்பட்டாலும், எந்த கட்சி பிரச்சினைகளை தீர்க்கும் கட்சி தற்போது நடைபெறும் தேர்தலில் சார்ந்துள்ள கட்சிகள் மக்களின் பார்வையில் பார்க்கும்போது

| | | |
|---|---|---|
| தி.மு.க. அணி | - | 42 |
| அ.தி.மு.க. அணி | - | 40.15 |
| நாம் தமிழர் | - | 5.69 |
| பிற | - | 10.95 |

### ❖ ஈரோடு (கிழக்கு) தொகுதியில் அரசு அலுவலகங்களின் செயல்பாடு:

அரசு அலுவலகங்கள் / அதிகாரிகள் மீது வெவ்வேறு விதங்களில் கடும் அதிருப்தியைப் பெரும்பாலோர் வெளிப்படுத்துகின்றனர். லஞ்சம் வாங்காமல் எந்த வேலையும் நடப்பதில்லை என்பது ஆணித்தரமாக (67.4) பதிவாகியுள்ளது. அரசு

அதிகாரிகள் நேர்மை, கடமை உணர்வோடு செயல்படுவதாக தெரிவிப்போர் மிகச்சிலர் (8.4) மட்டுமே. அப்பாவி ஜனங்களை தேவையில்லாமல் இழுத்தடித்து அலைக்கழிக்கிறார்கள் (9.2) ஆளும் தோழமைக் கட்சிக்காரர்களுக்கு மட்டுமெ காரியம் ஆகிறது (6.5) பெரும்புள்ளிகள் சிபாரிசு இல்லாமல் எதுவும் நடப்பதில்லை (4.8) ஆகியவை பிற சிறுபான்மைப் பதில்கள்.

❖ **தமிழகத்தில் பா.ஜ.க. கட்சித் தலைவர் திரு.அண்ணாமலை அவர்களின் பேச்சு, செயல்பாடு மக்கள் மத்தியில் வரவேற்பு குறித்து:**

வரவேற்பு (59%) அதிக வெறுப்பு (28%) எ.சொ ((13%)

❖ **தமிழகத்தின் முதலமைச்சராக திரு.ஸ்டாலின் அவர்கள் இருப்பதை ஈரோடு (கிழக்கு) தொகுதி மக்கள் விரும்புகிறார்களா?**

விருப்பம் (39%) விரும்பவில்லை(51%) எ.சொ ((10%)

❖ **தி.மு.க. அரசின் அணுகுமுறையும், நம்பகத்தன்மையும் குறித்து :**

| | | |
|---|---|---|
| தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றுவது மற்றும் அமைச்சர்களின் செயல்பாடுகள் காரணமாக | - | 21 |
| ➢ அரசு மீது வெறுப்பு ஏற்படுகிறது | - | 39 |
| ➢ நம்பகத்தன்மை ஏற்படவில்லை | - | 30 |
| ➢ எதுவும் சொல்வதற்கில்லை | - | 10 |

❖ **தமிழகத்தின் எதிர்கட்சித் தலைவரின் செயல்பாடுகள் குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?**

| | | |
|---|---|---|
| ➢ ஆதரவு | - | 49 |
| ➢ எதிர்ப்பு | - | 35 |
| ➢ எ.சொ | - | 16 |

❖ **தமிழகத்தின் அரசியல் கட்சியில் சிறந்த எதிர்கருத்துக்களை பதிவு செய்யும் எதிர்கட்சித் தலைவர்கள் வரிசையில் முதல் மூன்று இடத்தை பிடிக்கும் தலைவர் யார்?**

1) திரு.அண்ணாமலை
2) திரு.எடப்பாடி பழனிச்சாமி
3) திரு.சீமான்

❖ **தமிழகத்தின் முதலமைச்சர் திரு.ஸ்டாலின் அவர்களின் ஆட்சி தொடர வேண்டுமா? ஆட்சியை கலைத்து மறு தேர்தல் நடத்த வேண்டுமா?**

- ஆட்சியை கலைக்க வேண்டும் - 38%
- ஆட்சி தொடர வேண்டும் - 22%
- பொதுத் தேர்தல் நடத்த வேண்டும் - 10%
- பாராளுமன்ற தேர்தலை சேர்த்து - 30%
  தமிழக சட்டமன்ற தேர்தல் நடத்த வேண்டும்

❖ **தற்போதைய அரசியல் சூழலில் யாருக்கு வாக்கு?**

தமிழகத்தின் தற்போதையஅரசியல் சூழலில் பின்னனியில் இன்று ஈரோடு (கிழக்கு) சட்டமன்ற தொகுதியில் இன்று வாக்களிப்பதாக இருந்தால் முதலிடத்தில் காங்கிரஸ் அதனைத் தொடர்ந்து இரண்டாவது இடத்தில் அதிமுகவும் தொடர்ந்து பிற கட்சிகள் கீழ் வருகின்றன அதன் விவரம்.

| | | |
|---|---|---|
| காங்கிரஸ் | - | 45 |
| அதிமுக | - | 39.52 |
| நாம் தமிழர் | - | 9.51 |
| பிற | - | 5.20 |

❖ தமிழகத்தின் போதைப்பொருள் அதிக நடமாட்டம் போதைப்பழக்கம் இளைஞர்களிடம் அதிகரிப்பு தமிழக அரசு கட்டுப்படுத்தும்விதம் குறித்து.

| | | |
|---|---|---|
| நன்று | - | 11 |
| அதிருப்தி | - | 80 |
| எ.சொ | - | 9 |

❖ தமிழகத்தில் இப்போது இருக்கும் முதலமைச்சர் திரு.ஸ்டாலின் அவர்களின் ஆட்சி சிறப்பான ஆட்சியா? (அல்லது) முன்னாள் முதலமைச்சர் திரு.எடப்பாடி பழனிச்சாமி முந்தைய ஆட்சி சிறப்பான ஆட்சியா?

| | | |
|---|---|---|
| திரு.ஸ்டாலின் | - | 42 |
| திரு.எடப்பாடி பழனிச்சாமி | - | 53 |
| எ.சொ | - | 5 |

❖ வெற்றிவாய்ப்பு வித்தியாசம்?

காங்கிரஸ் 42 (அ) 49
அதிமுக 31(அ) 36
நாம் தமிழர் 6.90 (அ) 10 சதவீதம்
(நோட்டா,தேமுதிக, பிற) 5.58

❖ இந்த தேர்தலில் எதிர்பார்க்கும் வாக்காளர் வாக்கு சதவீதம்?
76.58 (அ) 85

❖ <u>அரசியல் பண்பாடும், பண்பாட்டு அரசியலும்</u>

வேணுமனே தேர்தலை முன் வைத்த கணிப்புகளுக்கு மாறாக தேர்தல் பின்புலத்தில் மக்களை மையப்படுத்திய நேர்மையான, நடுநிலையான, நம்பகமான, வெளிப்படையான, துணிச்சலான, கள ஆய்வுகளாக இருப்பதால் இந்த நூற்றாண்டில் இதுவரை தமிழகம் / தமிழர்கள் பயின்று வந்துள்ள பாதைகள் பார்வைகளின் திசைகள், உந்துவிசைகள், எதிர்கொண்டுள்ள சவால்கள்/ சவடால்கள் அவற்றின் பின் உறைந்துள்ள / சிதைந்துள்ள வரலாறுகள், பண்பாட்டு ஆணிவேர்கள்/ எச்சங்கள், அரசியல் கணக்குகள்/பிணக்குகள், தேர்தல் சூத்திரங்கள்/சாத்திரங்கள்,

ஊடகச் சிந்து விளையாட்டுக்கள்…என நிகழ்கால வரலாறு வரையியலின் அனைத்து அம்சங்களையும் ஒருங்கெ திரட்டித் தருகிறது.

ஆய்வாளர்கள், அரசியல் நோக்கங்கள், அரசியல்வாதிகள், தமிழகப் பண்பாடு - அரசியல் பரிமானங்களை இன்னும் சற்று நெருங்கிச் சென்று புரிந்துகொள்ள மேலாய்வு செய்வதற்கான தரவுகளின் பெட்டகமாக விளங்குகிறது. மக்கள் பெயரைச் சொல்லி /மக்களை அணுகி மேற்கொள்ளப்படும் ஆய்வு எத்தகையதாக இருந்தாலும் அந்த ஆய்வின் முடிவுகளை அறிந்து கொள்ளும். உரிமை ஆய்வு செய்யப் பயன்படுத்தப்பட்ட மக்களுக்கு உண்டு. அவ்வாறு வெகுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளத்தக்க விதத்தில் ஆய்வுகள் குறித்த விவரங்களை வெளிப்படையாக வைத்திருக்க வேண்டிய கடமை ஆய்வாளர்களுக்கு உண்டு. இத்தகைய கருத்தியல் பின்னனியில் "மக்களை ஆய்வது மக்களுக்காகவே" என்று கொள்கை வாக்கை மெய்பிக்கும் மற்றொரு முயற்சியே இந்த கள ஆய்வு.

❖ **கவனத்திற்கு:**

1) மக்கள் கருத்துக்களை தெரிவிக்க பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன.
2) கேள்விக்கான பதில்களில் முக்கியமானவை மட்டும் பட்டியலிடப்பட்டுள்ளதால் சதவீதங்களின் கூட்டுத்தொகை 100% விட குறைவாக இருக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பதில்களைச் சொல்லக்கூடிய வினாக்களுக்கு மட்டும் 100% விட அதிகமாகும்.

கள ஆய்வின் பல்வேறு நிலைகளில் பங்கேற்ற அனைவருக்கும் மற்றும் பத்திரிக்கை நிருபர்களுக்கும் மற்றும் ஆய்வாளர்களுக்கும்

**நன்றி.**

## IPDS PRIVATE LIMITED